

**சாதி, மத பேய்களை விரட்டுங்கள். கல்வியும் பகுத்தறிவும் பெற்று அறநெறியில் வாழுங்கள்.**

-பெரியார்-

VADU இதழ் - 03 ஓகஸ்ட்-2007

**'வடு'வின்** மூன்றாவது இதழ் உங்கள் கைகளில் கிடைப்பதை யிட்டு நாங்கள் பெருமிதம் அடைகிறோம். இரண்டு இதழ்களின் பின்னர் எமக்குக் கிடைத்த பாராட்டின் அளவு... எதிர்ப்பும் கிடைத்துள்ளது. அதுகூட எம்மை மென்மேலும் வளர்த்துக்கொள்ளவே வழி செய்கின்றது. 'வடு' இதழ் கைகளில் கிடைத்ததும் கோபத்துக்குள்ளானவர்களை மட்டுமல்ல, சுருட்டி சட்டைப்பையில் வைத்து அவமானத்துடன் நகர்ந்து போனவர் களையும் நாங்கள் பார்த்திருக்கின்றோம். அவர்கள் மன நிலையை எம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

ஈழ சமூகத்தின் சாதியமைப்பும் அதன் கொடூரங்களும் இந்திய சமூகத்தின் சாதியமைப்புடனும் வன்முறைகளுடனும் எந்தத் தளத்திலும் சளைத்ததல்ல. இலங்கையில் இன்றும் சாதியின் பெயரால் கொலையும் வன்முறையும் நடந்து கொண்டுதானிருக்கிறது. ஆனால் நாமோ ஒன்றே குலமென்று பாடுவோம் என்று, ஒற்றுமைக்காக கனவு கண்டு கொண்டிருக்கிறோம். ஈழத்தில் சாதியக் கொடுமை குறித்து அக்கறையாகப் பேசியவர்களில் பலரும் கூட தமிழீழக் கனவுக்குள் புதைந்துபோய் ஈழத்தில் இப்போது சாதிகள் இல்லையடி பாப்பா என்று பாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் வேதனையான உண்மை.

இன்நிலையில், வடு இதழானது சாதியம் சார்ந்த கொடுமைகளையும் அதன் அனுபவங்களையும் பதிவுசெய்து கொள்வதுடன் எமது வானொலிகள், பத்திரிகைகள், பொதுநிகழ்வுகள், அறிக்கைகள் போன்ற பொதுசன கருத்தியல் தளங்களில் எவ்வாறு சாதீயம் காப்பாற்றப்பட்டு வருகின்றது என்றும் ஆராயும். நமது மொழி கலாசாரம் கல்வி என்று எல்லா நுண்ணியதளங்களும் சாதிகாப்பாற்றுபவையே. நமது சமூகத்தில் கல்விமான்கள் அறிவு «சீவிகள்» என்று நாம் யாரையெல்லாம் நம்பி வந்தோமோ அவர்களெல்லாம் எப்படி சாதிமான்களாக இருந்தார்கள், இருக்கின்றார்கள் என்று நாம் புரிந்துகொள்வோம்.

MfNt 'வடு' இதழின் நண்பர்கள் இதழ் குறித்த விமர்சனங்களை எழுதுவதுடன் தமது சாதியக் கொடுமையின் அனுபவங்களை எழுதி அனுப்பின் தொடர்ந்துவரும் இதழில் பிரசுரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். (ஆ.ர்)

njhlHGfl;F:-
**MR.THEVATHASAN**
**4,PLACE ROGER SALENGRO**
**95140 GARGES LES GONESSE**
**France**
**(E-MAIL:VADU.WORLD@hotmail.fr)**

நன்கொடை-1€
சந்தா வருடம்-15€
(தபாற்செலவு உட்பட)

## "தலித்மாநாடு"

**பிரான்சில், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினரால் சர்வதேச தலித் மாநாடு நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.**

**எமது** தலித் சமூகத்தின் வாழ்வியல் உண்மைகளை, அவர்கள் மீதான சமூக அலட்சியப்படுத்தல்களை , சமூக அவமானப்படுதல்களை என தலித் மக்களின் சமூக நிராகரிப்புக்கள் அனைத்தையும் தனது படைப்பிலக்கியப் பணியினூடாக இன்றும் அம்பலப்படுத்தி வருபவர் தோழர் தெணியான் அவர்களாகும். தோழர் டானியலுக்குப் பிற்பாடான தொடர்ச்சியை இவர் எழுத்துக்களில் காணலாம். இன்று புலம் பெயர் நாடுகளில் பரவலாகவே பேசப்படும் பொய்யுரையானது..! இப்ப ஊரில பாருங்கோ சாதியெண்ட சாமானே இல்லை. இதுக்குக் காரணம் எங்கட பெடியள்தான் பாருங்கோ எனும் ஆதிக்கப் புரட்டுக்கு சாட்சியமாக நாம் முன்வைக்கிறோம்... தோழர் தெணியானின் உயர்மானம் எனும் இச் சிறுகதை 2005 ஆம் ஆண்டு இலங்கையில் ஞானம் எனும் சஞ்சிகையில் வெளியானது. அப்பத்திரிகை ஆசிரியருக்கும், எழுத்தாளர் தெணியான் அவர்களுக்கும் வடு சஞ்சிகை தனது சினேகபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டுள்ளது.

# உயர்மானம்

தெணியான்

பிள்ளை நீ சாப்பிடு, எங்களைக் காத்திராதே!

தேனீரை அல்மீனியக் கேத்தலில் ஊற்றி கையில் தூக்கிக் கொண்டு வெளியே போகும் போது அம்மா சொல்லிக்கொண்டு போனாள்.
அம்மா போய் சற்று நேரத்துக்கெல்லாம் வேலைகள் அனைத்தும் முடிந்து அடுக்களைக்குள் இருந்து அவள் வெளியே வந்துவிட்டாள்.

உடம்பு வியர்வையில் பிசுபிசுக்கிறது, சவக்காரப் பெட்டியை கையில் எடுத்துக்கொண்டு கிணறு நோக்கி மெல்ல நடக்கின்றாள். கொட்டிலுக்குள் கட்டையில் கட்டி நிற்கும் கன்னி மறி அவள் கண்ணில் படுகிறது.
இரவுபகல் ஓயாமல் அது அழுகிறது.

ஈத்துவடித்து, வாலை ஆட்டி ஆட்டி, பின்னங்கால்களை அசைத்து மெல்லத்துள்ளி தொடர்ந்து அழுதுகொண்டு நிற்கிறது.
நான்கு மறிகளும் இரண்டு குட்டிகளுமாக பெரிய குடும்பத்து கன்னி மறி, இன்று தனித்துப் போய்விட்டது.
காலையில் கட்டையை விட்டுப்போனால் நடுப்பகல் தாண்டி எல்லாம் படலைக்கு வந்து நின்று குரல் கொடுக்கும். புண்ணாக்கு தண்ணிக்குள்ளே வடித்த கஞ்சியைக் கலந்து வைக்க சுவைத்துக்குடித்துவிட்டு திரும்பிப் போய்விடும்.
செக்கலுக்குள்ளே மீண்டும் கட்டைக்கு வந்து சேரும்.

கமக்காறன் வீட்டில் பசு நிற்கவேணும் அப்பா சொல்லுவார்.

சொல்லுப்போல் இரண்டு பசு வளர்க்கிறார். பசுவுக்கு பனையோலை வெட்டிப்போட வரும் முத்தனுக்கு கன்னி மறியிலே ஒரு கண். அப்பாவை மெல்லத்தட்டிப் பார்த்தான்.

முத்தன், எதைக்கேட்டாலும் தருவன். கன்னி மறியைப்பற்றி மட்டும் கதையாதே

அப்பா முடிவாக மறுத்துவிட்டார். இந்த கன்னி மறி பெரும் குரலெடுத்து அழுதுகொண்டிருக்கிறது. அப்பா அதை அவிழ்த்து விட வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார். நேற்றிரவு அம்மா சொன்னாள்.

' அவன் முத்தன்ர கண் பட்டுப்போச்சு, ஆடு அழுகுது.

சீ...! அவனில ஏன் பழி போடுகிறாய்!

அப்ப... தீன் போதாதாக்கும்!

இரவுபகலாக அழுகுது, தீனிக்கே!

பின்ன என்னத்துக்கு?

' உனக்கொண்டும் விளங்காது விசரி, அது கிடாயைத் தேடுது.
அதுக்கு... கட்டையிலே கட்டி வைச்சால்!?

' அவிட்டுவிட்டால் ஆற்றையும் கிடாயைத்தேடிப் போயிடும்.

இப்ப வெங்காயம் கிண்டி வீட்டுக்கு வரும் மட்டும் எனக்கு நேரம்மில்லை.

' உங்கடை நேர காலத்துக்கு... எல்லா தோதுப்படும் எண்டதுதான் உங்களுக்கு எண்ணம்.

' என்னப்பா சொல்லுகிறாய்!

ஓ ... அப்படியெண்டால் உங்களுக்குப் புட்டுக்காட்ட வேணும். பிள்ளைக்கும் முப்பது வயதாகுது

ஹூம்... பார்ப்பம்

அப்பாவின் வளமையான பெருமூச்சு. அவர் மனக்கஸ்டம் அம்மாவுக்குத் தெரிந்தும், பேசாமல் அவர் எப்படி இருக்க முடியும்?
அந்த நாளையில் மகள் பெயர் சொன்னால் அப்பா தல நிமிர்ந்து நிற்பார்.

என்ரை பிள்ளையின்ரை ஒரு விரல் மடிக்கேலாது. என்ர பிள்ளைபோலதான் தங்கட பிள்ளைகளை வளக்க வேணும் எண்டு ஆசைப்படுகிறான்கள்.

அப்பா அவளைக் கண்ணும் கருத்துமாகத்தான் வளர்த்தார். அப்பா நெற்றியில் திரிபுண்டரமாக எப்பொழுதும் திருநீறு இருக்கும். அவள் பிறை நெற்றியில் ஒற்றைக் கீற்று நீறு எப்பொழுதும் அவளுக்கு எழிலூட்டும்.
அப்பா சும்மா ஆளா! புராணத்துக்கு பயன்சொல்லுகிற பேர்வழி. அப்பாவுக்கு உயிராக ஒரு அருமைத் தங்கச்சி, தங்கச்சி என்றால் அப்பா மாய்ந்துபோவார். அந்த தங்கச்சிக்கு குலக்கொழுந்தாக அருமை பெருமையான ஒருமகன். பிறகு அப்பாவைச் சொல்லவா வேணும்.
அந்த மருமகன்தான் அப்பாவுக்கு எல்லாம். அவன் கடும் செல்லம். அவனுக்கு சுட்டுப்போட்டாலும் பள்ளிப்படிப்பு வராது என்று வாத்திமார் சொல்லிப் போட்டார்கள். ஆனால் அவள் க.பொ.த. சாதாரணம் நல்லாத்தான் சித்தி அடைந்தாள்.

தங்கச்சி அப்ப சொன்னாள்:

«அண்ணை பிள்ளைக்கு இவளவு படிப்பும் போதும். உன்னைப்போல கந்தபுராணத்துக்குப் பயன் சொல்லவே போறாள்!»

தங்கச்சி சொன்னாள் பிறகென்ன மறுபேச்சு! தங்கச்சி வீட்டுக்கு போகிற மருமகள்தானே! அவள் வீட்டோடு தங்கிவிட நேர்ந்தது. அவளின் நல்ல குணம் அறிந்து அப்பாவிடம் சாடை மாடையாக சிலர் தட்டிப் பார்த்திருக்கின்றார்கள்.
அப்பொழுதெல்லாம் அப்பாவிற்கு சினம்தான் முன்னுக்கு வரும்.

«இதென்ன கத! என்ரை மருமேனுக்கெண்டுதானே அவள் பிறந்திருக்கிறாள்.» என்பார்.

சுவிஸ் போன மருமகன் மூன்று ஆண்டுகளுக்கு முன்னம் ஊருக்கு வந்திறங்கினான். பல்கலைக்கழகத்தில் படித்தவன் பெயருக்குப் பின்னே பட்டம் இருப்பது போல, அவன் பெயருக்கு பின்னே சுவிஸ் இருந்தது. அப்பா சீதனம் வாங்காமல் அம்மாவை விரும்பி முடித்தவர். அப்பா அம்மாவுக்கு அப்ப சின்ன வயது. இப்பதான் என்ன அப்பா ஐம்பத்தைந்து தாண்டவில்லை. அம்மா ஐம்பதைத் தொடவில்லை. பெயருக்குப் பின்னால் ஒரு பட்டம் இருந்தால் கல்யாணச் சந்தையில் விலை மிக அதிகம். தங்கச்சி மகன் பெயருக்கு பின்னால் சுவிஸ் எண்ட பட்டம் இருந்தது. சந்தையில் நல்லவிலைக்கு தங்கச்சி விற்றுவிட்டாள். எல்லாம் முடிந்தபிறகு அப்பாவில் அனுதாபம் உள்ளவை தங்கச்சியோட பேசினார்கள்.

«;என்ன அண்ணனைக் கைவிட்டு விட்டியள்?»

«நான் இல்லை எண்டு சொல்லயில்லை.»

«அப்படி எண்டால்… அவற்றை பிள்ளைக்கு செய்திருக்கலாம்தானே!»

«என்ர ஆம்பிளைப் பிள்ளைக்கு ஒரு மதிப்பு மரியாதை வேண்டாம்!»

«மேட்டிமை காட்டுகிற அளவுக்கு அவரிட்டை என்ன சீதனம் கிடக்கு!»

«சீ... நான் சீதனத்த சொல்லயில்ல. அவனிட்டை இல்லாத பெரிய சீதனமே!»

«அப்ப என்ன வேணும்?»

«ஒரு மாப்பிளையைத் தன்ர பிள்ளைக்கு செய்ய விரும்பினால் அவளை மாப்பிளை கேட்டு வரவேணும். அப்பதானே அந்த மாப்பிளைக்கு ஒரு மதிப்பு.»
«அண்ணர் வந்து ஒரு மருமேனைத் தரச்சொல்லிக் கேட்கவில்லை?»

«இல்லை, கேட்டிருந்தால் குடுத்திருப்பேன்.»

தங்கச்சிமார் எப்போதும் காரிய கெட்டிக்காரிகள்தான். அப்பா அதன்பிறகு ஆடிப்போனார். அம்மா மகளின் கதையெடுத்தால் இப்படித்தான் மௌனமும் பெருமூச்சும்.

«பிள்ளை கேட்டுக்கொண்டு கிடக்கப்போகிறாள்.»

«;அவள் நித்திரையாகியிருப்பாள்.»

இருவரும் தணிந்த குரலில் மெல்லப் பேசிக்கொள்கிறார்கள்.

அவள் படுக்கையில் மறுபக்கம் திரும்பிப் படுகின்றாள்.

கன்னி மறி அழுதுகொண்டு நிற்கிறது.

அவள் ஆட்டுக்கொட்டில் தாண்டி கிணற்றடிக்கு வருகின்றாள். தொட்டிலில் நீர் தழும்பி வளிகிறது. மேல் கால் கழுவிப் போக வந்தவள் அதை மறந்து நீரை மொண்டு தலையில் ஊற்ற ஆரம்பிக்கின்றாள். ஆசை தீர, குளிர்ந்த நீரை அள்ளி வார்த்துக்கொண்டு திரும்பி வந்து உடைகளை மாற்றி, கூந்தலை ஈரம்போக உலர்த்துகிறாள். பின்னர் இலேசாக முகத்தில் பவுடர் தடவிக்கொண்டு கூந்தலை விரித்து விட்டவண்ணம் வீட்டு விறாந்தையில் வந்து அமருகின்றாள்.

அம்மா சொல்லிப் போனது அவள் நினைவுக்கு வருகிறது. ஆனால் அவளுக்கு வயிற்றில் பசி எடுக்கவில்லை.


அவள் உடலை ஏதோ செய்கிறது. கைகளை மேலே உயர்த்தி உடலை முறிப்பது போல முறுக்கி, நெட்டி முறிக்கிறாள்.

அப்பொழுது அவள் வீட்டுப்படலையில் லான்ட்மாஸ்டர் ஒன்றுவந்து நிற்கிறது.

அவள் பட்டென்று எழுந்து போகின்றாள்.

முத்தன் மகன் சின்னராசன்.

பிடி பிடியாகக் கட்டின வெங்காயம் மலையாக லான்ட்மாஸ்ரலில் குவித்துக் கிடக்கிறது. லான்ட்மாஸ்ரலில் சுமை ஏற்றி இறக்குவதுதான் இப்ப தொழில். அவளுக்கு இரண்டு மூன்று வயது இளையவன். சிறுசில் தகப்பனோடு இங்கு வந்து போனவன்.



«பெடிய தட்டி படலையை திறந்து விடுங்கோ, உள்ளுக்கு கொண்டுவாறன்.» என்கிறான் அவன்.

அவள் தட்டியை அவிழ்த்தெடுக்கிறாள். லாண்ட்மாஸ்ரர் உள்ளே வந்து வீட்டுக்கு பின்புறம் வீட்டோடு இணைத்து இறக்கி விடப்பட்டுள்ள சார்புக்கு முன்பு தரித்து நிற்கிறது. சின்னராசன் ஈர்க்கில் பிடித்து இரண்டு கைகளிலும் வெங்காயப் பிடிகளை தூக்கிக் கொடுக்க அவள் உள்ளே கொண்டுபோய் வைக்கின்றாள். சற்று நேரத்தில் அவள் உள்ளே கொண்டு போய் வைத்து திரும்பும்வேகம் மெல்லக் குறைந்துபோகிறது. அவன் வெங்காயப் பிடிகளை கையில் தூக்கிகொண்டு அவள் வந்து கையில் வாங்கும்வரை காத்திருக்க வேண்டியிருக்கிறது.

«ஏன் தூக்கி வச்சுக்கொண்டு நிக்கிறையள்? உள்ளுக்கு கொண்டுவந்து வையுங்கோ.» என்கிறாள் அவள்.

இருவரும் தூக்கித்தூக்கி கொண்டுபோய் உள்ளே வைக்கின்றார்கள். வேகமாக வேலைநடக்கிறது. இன்னும் இரண்டு தடவைகள் அவன் வெங்காயம் ஏற்றிக் கொண்டு வரவேண்டும். இறுதியாக இரண்டு பிடிகளை கையில் தூக்கிச் சென்று கீழே வைத்துவிட்டு அவன் நிமிருகிறான். அவன் எதிரில் நெருங்கிவந்து நிற்கும் அவள் தனது கரங்களினால் அவன் கழுத்தைச் சுற்றி அணைத்து அவன் கன்னங்களில் முத்தமிடுகிறாள். அவன் பட்டென்று தன்னோடு இறுக அணைத்து நொருங்க இறுக்குகிறான்.

தோட்டத்தில் வெங்காயம் கிண்டும் பெண்களுக்கு கூலி கொடுக்க வேண்டும். அப்பா கூலிக்காசை எடுத்துப்போக மறந்துபோனார். சைக்கிளை எடுத்துக்கொண்டு வேகமாக வீட்டுக்கு ஓடி வருகின்றார். வீட்டில் யாரும் இல்லை. லாண்ட்மாஸ்ரர் வெறுமையாக நிற்கின்றது. அப்பா சார்பு நோக்கிவருகின்றார். அவள் உடைகளை சரிசெய்துவிட்டுக்கொண்டு கூந்தலை அள்ளிமுடித்தவண்ணம் வெளியே வருகின்றாள். அவள் பின்னால் சின்னராசன்.

பொங்கி எழும் சினத்தில் கைகால்கள் பதறுகின்றன.

இருவரையும் கொலைசெய்துபோடும் வெறி அவருள் எழுகிறது.

அவள் தலைகுனிந்து நடுங்கி நிற்கிறாள். அவன் பேந்தப் பேந்த விழிக்கிறான்.

அப்பா ஒருகணத்தில தன் உணர்வுகளை கட்டுப்படுத்திக்கொண்டு சட்டென்று திரும்பி வீட்டுக்குள்ளே போகின்றார். லாண்ட்மாஸ்ரர் புறப்பட்டுப் போகின்றது. அவள் என்ன நடக்கப்போகின்றது என்று தெரியாமல் ஏங்கி நிற்கின்றாள்.
«குற்றம் என்னிலேதான். காலகாலத்திலே செய்து குடுத்திருந்தால் இப்படி எல்லாம் நடந்திருக்காது. இது உலகத்திலே நடக்காத சங்கதி அல்ல. வெளியிலே விட்டால்... மானம், மரியாதை எல்லாம் போச்சு. பிறகு ஒருதன்ரை கையிலே பிடிச்சுக் குடுக்கேலாது. ஆனால் ... ஆனால்... இவள் இப்படி.... சீ.....!»

அப்பா தன்னைச் சமாதானம் பண்ணிக்கொண்டு கையில் காசை எடுத்தவாறு வெளியே வருகின்றார்.

அவள் நின்ற இடத்திலிருந்து அசையாது முன்னர் போலத் தலை குனிந்துவண்ணம் நிற்கின்றாள்.
அப்பா விடுவிடென்று அவள் எதிரில் வந்து நின்று, தலையில் இருந்து கால்வரை ஒருதடவை பார்த்து விட்டு,

«சீ... உனக்கு எங்கடை ஓராள் கிடைக்கவில்லையா?»

எனக்காறித் துப்பிக்கொண்டு திரும்பி வேகமாக நடக்கின்றார்.

அதிர்ந்துபோன அவள் போய்க்கொண்டிருக்கும் அப்பாவை அதிசயமாக நிமிர்ந்து பார்க்கின்றாள்..

# காதில் கசிந்தவை

**த**மிழ் பேசும்மக்கள் எல்லோரும் ஒன்றாம். ஒரு தாய் மக்களாம். சமனாம், சமத்துவமாம் என வெளியில் பேசிக்கொண்டாலும் உள் மனதுக்குள் உறைந்து கிடக்கும் சாதிய நஞ்சு அவர் களையும் மீறி வெறியாட்டம் போடாமல் இல்லை.

யாழ்ப்பாணத்தில் உள்ள சண்டிலிப்பாய் கிராமத்தில் தலித் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரின் இளைய சகோதரன் சுவிஸ் நாட்டில் வாழ்வதால் அவர் காட்டில் காசுமழை. கையில் பணம் புழங்கியதால் தானும் இந்தக் கிராமத்தில் வீடு கட்ட வேண்டுமென ஆசைப்பட்டு சண்டிலிப் பாயிலேயே பெரிய வீடாக இருக்க வேண்டுமென்ற கனவில் இரவு பகலாக கஸ்ரப்பட்டு அவரது பரம்பரையே கட்டிப்பார்க்க ஆசைப்பட முடியாத பெரிய வீட்டைக்கட்டி முடித்து, குடிபுகும் நேரத்தில் இராணுவம் இவரைப் பிடித்துச் சென்றது. இந்த அப்பாவித் தலித் எந்த விடுதலை இயக்கத்தையும் சாராமல் தானுண்டு தன் வேலையுண்டு என வாழ்ந்தவர். ஏன் இராணுவத்தால் பிடிக்கப்பட்டார்?
இவரால் கட்டப்பட்ட வீட்டுக்கு சற்றுத்தொலைவில் உள்ள ஒரு தமிழ் மகன், இவர் ஒரு விடுதலைப் புலிகளின் உறுப்பினர் என பொட்டிசம் எழுதி இராணுவத்திற்கு அனுப்பி வைத்து தனது தமிழ்தேசிய சேவையை நிறைவுடன் செய்து திருப்திப்பட்டுக்கொண்டார்.

**ஒரு தலித் தன் வீட்டைவிட பெரியவீடாக கட்டுவதா?**

# சாக்கிய " முனி "

**அசுரா**

**மேற்குலக** அறிஞர்கள் பலர் தொடர்ந்தும் புத்தரின் வாழ்க்கை வரலாற்றையும் அவரின் மனித விடுதலை பற்றிய ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகிறர்கள். அம்பேத்கரின் புத்தர்பற்றிய தேடல்களிலிருந்து விடுபட்ட பல தகவல்களை மேற்குலக அறிஞர்கள் ஆதாரங்களுடன் ஆய்வுசெய்து வருகிறார்கள். அவர்களில் ஜேர்மனிய பௌத்த வரலாற்று ஆசிரியரான Hans Wolfgang Schumann. அவர்களும் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த லௌசன் பல்கலைக்கழக விரிவுரையாளர் Johannes Bronkhorst என்பவரும் அதிகமான தகவல்களை வெளியிட்டு வருகின்றார்கள். இதில் யோன் புறோன்கொர்ஸ் மகதநாட்டின் பண்பாடுகளை தீவிர ஆய்வுக்குட்படுத்திய நிபுணராகும்.


இந்தியாவின் வடபகுதியிலுள்ள கங்கைச் சமவெளிப் பிரதேசங்களாக கோசலம் மகதம், அங்கம், காசி, போன்ற 16 நகரங்கள் இருந்துள்ளதாக அறியப்படுகிறது. இதில் , கோசலமும், மகதமும், மனித மேம்பாட்டில் மிக அக்கறை கொண்ட பிரதேசங்களாக இருந்துள்ளது. அந்நாட்டின் நிர்வாகமானது அரச நிர்வாகமாக இருந்ததில்லை. குடியாட்சி முறைகொண்ட சுழற்சி முறையில் மக்கள் பிரதிநிதிகள் தேர்வு செய்யப்பட்டனர். புத்தரின் சாக்கிய இன வம்சத்தினர் ராஜ வம்ச நிர்வாகத்தினராக இருந்ததில்லை. அங்குள்ள ராஜ நிர்வாகமென்பது. பார்ப்பனர்களின் கருத்தியலில் உருவாக்கப்பட்ட மனிதர்களுக் கிடையிலான ஏற்றத்தாழ்வுகளை அடிப்படையாகக் கொண்டது. இந்தியாவில் அரசர்கள் எனப்படுவோர் சத்திரிய வம்சத்தினராகும். சாக்கிய வம்சத்தில் பார்ப்பனிய ஏற்றத்தாழ்வுகளைக் கொண்ட சாதியமைப்பு இருந்ததில்லை. தற்போது நாம் பேசுகிற குடியாட்சியின் கருத்து நிலையல்ல மகத, கோசல நகரங்களில் நிர்வகிக்கப்பட்ட குடியாட்சி என்பது. சாக்கிய இனத்தின் குடியாட்சி முறையானது ஒரு சம்பவத்தை அமுல்படுத்துவதற்காக பெரும்பான்மை ஆதரவுகளைப் பெற்று முடிவுசெய்யப்படுவதல்ல. ஒரு விடயம் சம்பந்தமாக முடிவெடுப்பதற்கு பல ஆண்டுகள் கடந்த நிலை இருந்துள்ளது. தொடர்ந்து பேசுவதும் பலரின் அபிப்பிராயங்கள் பரிசீலிக்கப்படுவதும் அதன் தொடர்ச்சியாக அனைவரும் ஏற்றுக்கொள்ளும் முடிவை எடுக்கும் குடியாட்சி முறையையே சாக்கிய இன மக்களிடையே நிலவிவந்தது. இவ்வாறான வழிமுறையின் வளர்ச்சிப்போக்கிலேயேதான் ஓர் முழுமையான மனித விடுதலை சாத்தியம் என உணரப்பட்டது. இவ்வாறான பௌத்த சிந்தனையை முறியடிக்கும் செயலாக முன்வைக்கப்பட்டதுதான் ஜனநாயக முறையெனப்படுவது. இவ்வாறான அரசியல் ஜனநாயக முறையினூடாக மனித விடுதலை என்பது அறவே சாத்தியமில்லை. தற்போது பேசப்படும் ஜனநாயகம் என்பது முரண்பாட்டைக் காப்பதனூடாகவே அதனது இருப்பு சாத்தியம். முரண்பாடுகள் களையப்பட்டு புரிந்துணர்வும் சிந்தனை வளர்ச்சிப்போக்கும் நிகழும் வாய்ப்பை பௌத்தம் மேற்கொண்டது. இதை தகர்க்கும் சதிச் செயல்பாடாகவே ஜனநாயகம் முன்மொழியப்பட்டது. தற்போதைய ஜனநாயகத்தின் ஊடாக பிரச்சனைகள் பேசி தீர்ப்பது என்பதற்கு மாறாக..! பெரும்பான்மையை உடனே பெற்று அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்கமாகக் கொண்டது. அவ்வாறான ஜனநாயகம் அரசியல் அதிகாரத்தை மாற்றுவதற்காக சுலபமாகவும் விரைவாகவும் ஏற்படுத்தப்பட்ட மானிட விரோதக் கருத்தியல். சாக்கிய பௌத்த நெறிமுறையினூடாகவே மனித விடுதலை சாத்தியம் என்பதை. இன்று மேற்குலகம் முற்றாக நம்புவதுடன். புத்தரைப்பற்றிய எண்ணங்களும் அவர் மேற்கொண்ட அறநெறி உரையாடல்களும். மனித குலம் பின்பற்ற வேண்டியதொன்று என்பதும் உணரப்பட்டு வருகிறது.

பௌத்தம் ஒரு மதமல்ல பௌத்தப் பிரதிகளை 90 வீதமாகப் புனைந்தது பார்ப்பனியமே. அதனூடாக புத்தரை விஸ்ணுவின் ஓர் அவதாரமெனும் அயோக்கியத்தனப் புரட்டையும் பார்ப்பனியம் வரலாறாக திரிபுபடுத்தியுள்ளது. கி.மு. முதலாம் நூற்றாண்டிலிருந்து இலங்கையில் பாதுகாக்கப்பட்டு வரும் பாளி மொழிப் பிரதிகள் பௌத்தத்தின் மூலத்தை புரிந்துகொள்ள பெரும் உதவியாக இருப்பதாக மேற் குறிப்பிட்டுள்ள ஜேர்மனிய வரலாற்றாசிரியர் கூறுகிறார்.

அவை பாளி மொழியில் எழுதப்பட்ட மகாவம்சமோ, சூளவம்சமோ அல்ல. பார்ப்பனியமானது. மொழியை எழுத்து வடிவமாக்க முனையவில்லை காரணம் அதை பிற சாதியினர் கற்றுக் கொள்ளும் பட்சத்தில் அவர்கள் தமது நிலையை அடைந்து விடுவார்கள் எனும் அச்சமே அதற்கு காரணமாகும். இதன் காரணமாகவே பிற்பாடு மனு நீதிச் (மனுஸ்மிருதியில்) சட்டம் இயற்றப்பட்டது. அதன் நீதியானது பிற சாதியினர். தமது சாஸ்திரங்களை கேட்டால் அவர்கள் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவது.பிற சாதியினர் தமது சாத்திரங்களை உச்சரித்தால் அவர்கள் நாக்குகளை துண்டிப்பது. இதுவே இந்துத்துவத்தின் புனிதச் சட்டமாகும். புத்தரே இந்திய வேத காலத்தில் எழுத்து வடிவத்தின் அவசியத்தை உணர்ந்தார். அம்மொழியே (அது பாளி தான் என முடிவாக நம்பமுடியவில்லை) சமஸ்கிருதத்திற்கு முன்பாக எழுத்து வடிவம் பெற்றது. இவை பார்ப்பனியத்திற்கு மிக அச்சுறுத்தலாக இருந்தது. எனவேதான் பார்ப்பனியம் பௌத்தத்தை இந்தியாவில் இல்லாது ஒழிக்கவும், பௌத்தத்திற்கான வரலாற்றை தானே புனையவும் முற்பட்டது.

மகாவீரர் புத்தரின் சம காலத்தவரும் ஒரே ஊரைச்சேர்ந்தவருமாவார். இவரே ஜைன மத ஸ்தாபகருமாவார். மகாவீரரின் போதனையால் புத்தர் ஆகர்சிக்கப்பட்டார். ஜைன மதத்தில் பார்ப்பனியத்தைப்போல் கர்ம வினைக்கோட்பாடுகள் நிரம்பியிருந்தாலும் பார்ப்பனியத்தைப்போல் மனிதக் கொலை புரியும் மதமாக அது இருந்ததில்லை. மனிதர்களுக்கிடையேயான கர்ம வினைப்பயனான சாதிய ஏற்றத்தாழ்வுகளும் இருந்ததில்லை. அகிம்சை, கொல்லாமை என்பதை பிரதான அம்சமாகக் கொண்டதுடன் உடல் வருத்திக் கடும் தவம் செய்யும் முறையும் ஜைன மதத்தினூடாகவே அறிமுகமானது. இந்த வழி முறையை புத்தர் தொடர்ந்து 5 வருடங்கள் கடைப்பிடித்துவந்தார். மிகக் கடுமையான முறையில் உடலை வருத்தித் தியானத்தில் ஈடுபட்டார். நாளுக்கு ஒரு சோறு, ஒரு பயறு என்பதையே தனது உணவாகவும் மேற்கொண்டார். இதனால் அவரது உடல் நிலை பாதிக்கப்பட்டு வருவதையும் தாம் சில நாட்களில்

இறந்து விடக்கூடும் எனவும் நம்பினார். உயிருள்ள எலும்புக்கூடாக புத்தர் உரு மாறினார். மகாவீரர் கூறியதுபோல் தனது கர்ம வினைப் பயன் அறிய முடியாதெனவும் அப்படியொரு கர்ம வினையென்னபது இல்லை என்பதையும் அனுபவத்தினூடாகவும் கண்டுணர்ந்து. அத்தியான முறையையும் கைவிட்டார். உயிர் மற்றொன்றைச் சார்ந்து செயல் படுகிறதென்பதையோ. அதுவே நிரந்தரம் என்பதையோ புத்தர் மறுத்தார். அவர் தனது அனைத்துச் சுதந்திரத்தையும் அறிந்து கொண்டதோடு அவ்வாறான சுதந்திரமே மானுட விடுதலைக்கு உகந்தது எனவும் உணர்ந்து கொண்டார். கர்ம வினைக் கோட்பாட்டு, மறுபிறப்பு நம்பிக்கை, சாதிய ஏற்றத் தாழ்வுகள் போன்ற மூட நம்பிக்கையை அகற்றி மனித விழிப்புணர்வுக்கான போதனைகளை மேற்கொண்டார்.



பௌத்த காலத்தில் சேர்ந்து வாழ்வதன் அவசியமும், சேர்ந்து வாழும் சூழலும் நிலவியது. அங்கு குடியாட்சி அதிகாரம் தோன்றியது. அங்கு தோன்றிய குடியாட்சி என்பது ஜனநாயக முறையில் கட்டமைக்கப்பட்டதல்ல அவ்வதிகாரம் எவரிடமும் கையளிக்கும் பக்குவ நிலையில் இருந்தது. எனவே அது அதிகாரம் அல்ல அப்போதைய பௌத்த மனநிலையை அடிப்படையாகக் கொண்டதே தற்போது பேசுகின்ற பின் நவீனத்துவ மன நிலையென்பதும். அனைத்தையும் புரிந்து கொள்வது, மதிப்பது, பேணுவது ..அதனூடாகவே சேர்ந்து வாழ்வது சாத்தியம். அந்தவகையில் உலகில் பௌத்த சமூக சிந்தனை நிலைபெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றது என நம்பலாம். அனால் அது மனித இன அழிவிற்கு முன்பாக சாத்தியமா என்பதே பிரதான கேள்வியாக உள்ளது. காரணம் இயற்கையின் தோற்றத்திற்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பிற்பாடே மனிதனின் தோற்றமும் நிலவியது. அதே இம் மனித இனமானது முற்றாக அழிந்து போகும் காலத்தை நிர்ணியிக்கும் முயற்சியும் நடைபெற்று வருவதால் மீண்டும் பௌத்த சமூகம் சாத்தியமா?

புத்தரின் பாப்பனியக் கோட்பாடுகளுக்கெதிரான செயல்பாடே அவரை கொலை செய்யும் அளவுக்கு கொண்டு சென்றது. அவரது சொந்த மைத்துனன் ஊடாக மலையிலிருந்து கல்லை உருட்டிக் கொலை செய்யும் முயற்சி முதலில் நடந்தது. இரண்டாவதாக யானையை ஏவிக் கொலை செய்ய முயற்சி நடை பெற்றது. இறுதியாக அவரது கொலை (80 வயதில்) பன்றி இறைச்சியில் விசம் கலந்து கொடுக்கப்பட்டதால் நிகழ்ந்தது என நம்பப்படுகிறது.

1896 இல் தீபெத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள சாக்கிய முனிகளின் தங்கு மடங்கள் பல பௌத்த உண்மைகள் வெளிவரக் காரணமாக உள்ளது. (டுந ழௌளநட முடிளநசளயவநரச)

பேசப்படுகின்ற கோட்பாடுகளாலும், சித்தாந்தங்களாலும் மானுட விடுதலை என்பதும், சமாதானம் என்பதும் சாத்தியமில்லை. மானுட விடுதலைக்கான வழிகள் பௌத்தத்திடமே கொட்டிக்கிடக்கிறது. கருத்தியல்களின் அடிப்படை மாற்றமென்பது நிகழவில்லை. அனைத்தும் சார்பு நிலைகளில் ஒன்றோடு ஒன்று பேணி வருகிறது. இதற்கு புத்தரின் யுத்தம் பற்றிய கருத்து நிலையை இங்கு கூறலாம். புத்தர் நாடு கடத்தப் பட்டதற்கு காரணம் சாக்கிய இனத்திற்கும் கோலிய இன மக்களுக்கும் இடையில் ஏற்ப்பட்ட தண்ணீர்ப் பங்கீடே ஆகும். இதனால் இரு சமூகத்துக்கிடையிலும் யுத்தம் தோன்றும் சூழலை புத்தர் கண்டு கொண்டார். தான் நாடு கடத்தப்படுவதால் யுத்தம் தவிர்க்கப்படும் எனும் உத்தரவாதத்திலேயே புத்தர் நாட்டை விட்டு வெளியேறினார். பிற்பாடு யுத்தம் நடை பெற வில்லையென்று கூறி அவரது நண்பர்கள் அவரை வீடேறுமாறு கூறியபோது புத்தர் கீழ் வருமாறு கூறினார்.

**போர்ப் பிரச்சனை சாராம்சத்தில் ஒரு முரண்பாடு பற்றிய பிரச்சனை. அது ஒரு பெரிய பிரச்சனையின் ஒரு பகுதி மட்டுமே. இந்த முரண்பாடு மன்னர்களுக் கிடையில் மட்டுமோ, இராஜ்யங்களுக் கிடையில் மட்டுமோ அல்லாமல், பிரபுக்களுக்கும் பிராமணர்களுக்கிடையிலும், இல்லறத் தாரிடையிலும், சேய்க்கும் தாய்க்கு மிடையிலும், தந்தை மகனுக்கிடையிலும், சகோதர, சகோதரிகளுக்கிடையிலும் இணை, துணை யானவர்களுக் கிடையிலும் கூட எப்போதும் நிலவிக் கொண்டிருக்கிறது.**

இம் முரண்பாடனைத்தையும் புத்தர் யுத்தத்ததுக்குள் உள்ளடக்கிய தோடு பிற உப முரண்பாடுகளிலிருந்து என்னை நான் விடுவிக்காமல் வரமுடியாது எனவும் கூறி அதற்கான பிரதான வழிமுறையாக தனிமையை பின்பற்றினார்.

*(5 வருடகாலமாக தியானத்தில் இருந்ததன் விளைவே இதில் காணும் புத்தரின் தோற்றம்)*

ர்

---

## அரேபியக் குதிரை

திருவிழாக்காலத்தில்
அம்மாளின் முற்றத்தில்
அடிக்கடி புதுமை நடக்கும்
தீட்டுப்பட்டவர்
அருகில் சென்றால்
சினம்கொள்வாள்
தீட்டோடு துலா இழுத்தால்
மறுநாள் காலை
வாளி எங்கோ
மறைந்து விடும்
தீட்டோடு குளித்தாலோ
குடித்தாலோ
கிணற்றின் அடியில்
நெடில் வீசும்
ஒரு தீர்த்தத்திருநாளில்
தாகத்தில் நா வறள
குறுக்குக்கட்டோடு
சும்மாடு தலையில் ஏற்றி
குடத்தோடு...
அம்மனின் முற்றத்தில்
நல்லதண்ணீர் அள்ள

-புதுமைலோலன்-

# நண்பர்களோடு நாலுவார்த்தை.....

-தேவதாசன்-

இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் யுத்தம் தமிழ் பேசும் மக்களை மட்டுமன்றி சிங்கள முஸ்லிம் மக்கள் அனைவரது வாழ்வியல்புகளையும், உயிரழிவுகளையும் ஏற்படுத்தி வருகிறது. குறிப்பாக பொருளாதார வளமற்ற கீழ்மட்ட சமூகத்தினரே படுமோசமான சொல்லணாத் துன்பங்களை அனுபவித்த வண்ணம் வாழ்கின்றார்கள். இவ் அழிவுகளை நிறுத்துமுகமாக அரசு தரப்பும் தமிழர் தரப்பும் மனசுத்தியோடு ஆக்கபூர்வமான முறையில் பேசித் தீர்ப்பதற்கு முன்வரவில்லை. மாறாக இரண்டு தரப்பினருமே தங்கள் தங்கள் அதிகாரங்களை தக்கவைத்துக் கொள்வதற்கு ஏதாவது சாட்டுப் போக்குக்கூறி காலத்தை இழுத்தடிப்பதாகவே தெரிகிறது. இதனால் குறிப்பாக மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி உழக்கிய கதையாக தலித்மக்கள் கல்வியின்றி, வேலையின்றி, படுக்க இடமுமின்றி அலையும் அவலமே அதிகரித்து வருகிறது. 1972 இல் இடது சாரிக்கட்சியின் கூட்டு ஆட்சியினால் ஏற்படுத்தப்பட்ட திட்டங்கள் தலித் மக்களுடைய வாழ்க்கையை மேம்படுத்தியது. பின்னர் 1977 க்குப் பின் தமிழீழப் போராட்டம் ஆரம்பித்தமையால் மீண்டும் அவர்கள் வாழ்வும் முன்னேற்றமும் இறங்கு முகமாகவே வந்து இப்போது எதுவுமே அற்ற அனாதை களாக்கப்பட்டுள்ளனர்.

மறுபுறத்தில் இலங்கை தமிழ் சிங்கள அறிவு ஜீவிகளாலும் சில இயக்கங்களாலும், இலங்கையில் யுத்தத்தை நிறுத்தி அமைதியும் சமாதானமும் வரவேண்டும் எனும் நோக்கிலும் சர்வதேச உந்துதலின் விளைவாகவும் பலவிதமான தீர்வுத்திட்டங்கள் முன்வைத்துப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இந்த வகையில் வெளிநாடுகளிலும் குறிப்பாக தமிழர் பரவலாக இடம்பெயர்ந்து வாழும் பிரதேசங்களிலும் பலமாநாடுகளும் கூட்டங்களும் நடத்தப்பட்டு தீர்வுத்திட்டம் பற்றிய விவாதங்கள் நிகழ்த்தப்படுகின்றது. இருப்பினும் அத்தீர்வுத்திட்டங்களில் பலநூறு ஆண்டுகளாக திட்டமிட்டு வஞ்சிக்கப்பட்ட சமூகமான தலித்துகளின் முன்னேற்றம் கருதி விசேட அலகுகள் எதுவும் சேர்க்கப்படவில்லை.

தமிழ் முற்போக்காளர் எனச் சொல்லப்படுவோரும் மனித நேயம்பற்றி பேசுபவர்களும் தலித் மக்கள் முன்னேற்றம்பற்றி பாராமுகமாகவே நடந்து கொள்வதாகவே தெரிகிறது. ஏற்கனவே தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினரால் தலித் அறிக்கை தயாரிக்கப்பட்டு சகல அரசியல் தலைமைகள், அரசியல் ஆய்வாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையினை கவனத்தில் கொண்டு தீர்வுத்திட்டம் தயாரிக்கப்படுவதே நீண்டகால அமைதிக்கும் சமாதானத்திற்கும் வழிவகுக்கும். இதனை தலித்மக்களும் அவர்கள் வாழ்வு முன்னேற்றத்தில் அக்கறையுள்ளவர்களும் கவனத்தில் கொண்டு அதனை வலியுறுத்தும் உந்து சக்திகளாக மாற வேண்டும்.

# கேள்விக் கணைகள்

**1) சுதன் - பிரான்ஸ்**

***அன்புடன் வடு ஆசிரியர் குழுவிற்கு, தமிழ் மக்களின் தீர்வுபற்றி பரவலாக பேசிக்கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் உங்களால் முன்வைக்கப்பட்ட தீர்மானம் தீர்வுக்குழுவினை சென்றடையுமா?***

தமிழ் மக்களின் தீர்வு என்பது தமிழ் பேசும் அனைத்து மக்களினதும், அனைத்துப் பிரச்சனைகளுக்குமான தீர்வு என்பதனைப் புரிந்துகொள்ளாமல் நகர்ந்துகொண்டிருக்கும் இன்றைய போராட்ட(?) நிகழ்வுகளுக்கிடையில் குறைந்தபட்சம் பலரால் இல்லை என்று வாதிடப்படும், ஆனால் நிஜத்தில் இருக்கின்ற சாதியம் குறித்த அதனது ஸ்தூல வடிவிலான பல அம்சங்களையும் அதனது வேர்களையும், அதற்கு இன்றும் நீர் பாய்ச்சும் சக்திகளையும் அம்பலப்படுத்தும் ஓர் அளப்பரிய பணியினைத்தான் நாம் மேற்கொண்டிருக்கின்றோம்.

தீர்வுக்குழு, அதன் உள்ளடக்கம், அதன் நடைமுறைச் சாத்தியம், தடைகள் எனப் பலவாறான கவன ஈர்ப்புக்களுக்கும் அப்பால் அதில் ஒரு சலனத்தை, ஓர் அதிர்வினை நாம் ஏற்படுத்தினாலே எதிர்கால எம் தலித் மக்களின் போராட்ட பாதைக்கான ஒரு கோடிட்டுக்காட்டுதலை அது நிகழ்த்தும் என்பது எம் நம்பிக்கை.

**2) கமலநாதன் - கொழும்பு**

***நீங்கள் நடாத்தும் இப்போராட்டத்தின் மூலம் சாதி அழிந்து விடுமா?***

அழியவேண்டும் என்பதுதான் எம்நோக்கம். அது உடனடிச் சாத்தியம் என்றும் நாம் நினைக்கவில்லை. அதற்காக, அதற்கான போராட்டத்திற்கான சாத்தியக் கூறுகளினைக் கண்டறியாது விடலாமா?

உலக சமூதாய வரலாறுகளை ஆராயும்போது அது எத்தனையோ விதமான மாறுதல்களுக்குள்ளாகி முன்நோக்கி வளர்ந்து வந்திருப்பதனை அறியலாம். இதனைத்தான் வரலாறு எப்போதும் பின்நோக்கி நகர்வதில்லை என்று கூறுவது. ஆனால் எதுவுமே உடன் நிகழவேண்டுமென நினைப்பது வெறும் மனவிருப்பத்தினை குறிக்குமே தவிர, கால அவகாசத்தினையும், சமூக மாறுதல்களுக்கான அதன் உள்ளக முரண்பாடுகளுக்கு இடையிலான போராட்ட அளவுப் பரிமாணங்களையும் கணக்கில் எடுக்காதது ஆகும்.

அடுத்த பொங்கலில் தமிழீழம் பிறக்கும் என்றெல்லாம் அன்று மேடைகளில் வைத்து காதிலே பூச்சுற்றியவர்கள் போல நாம் எதையும் சொல்லவில்லை. தவிரவும் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இருக்கும் இப்பெரும் சமூகத்தீங்கான சாதியத்தை இந்தா, இப்போ ஒழிப்போம் என்று கங்கணம்கட்டிக்கொண்டு நாம் எழவும் இல்லை. ஆனால் அதை நோக்கி நகர்வதற்கான பாதையில், அதற்கான அடித்தளத்தினை இடவேண்டும் என்கின்ற இலட்சியத்தினை எம்மக்களிடம் பரவலாக்க வேண்டும் என்கிற பணியினைத்தான் நாம் இப்போது செய்கின்றோம். நாளை வரலாறு வெல்லும் இது மட்டும் எம் அசைக்கமுடியாத நம்பிக்கை.

# தீண்டாமைக் கொடூரங்களும் தீ மூண்ட நாட்களும்

epidTf;Fwpg;Gfs; - NjhoH Nahfnul;zk;

தோழர் யோகரெட்ணம் அவர்கள் பிரான்சில் புலம்பெயர்ந்து 25 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகிறார். இவர் தமது இளமைக்காலத்தில் இடதுசாரி அமைப்புக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர். வடக்கில் நிகழ்ந்த சாதிய சமூக மேலாதிக்கத்துக்கு எதிராக நிகழ்ந்த போராட்டங்களின் சாட்சியமாக விளங்குகிறார். தனது சாதியப் போராட்ட அனுபவங்களையும் எமது தமிழ் சாதிய சமூகத்தின் கருத்து நிலைகளையும் கொண்ட நினைவுக் குறிப்புகளை தொடர்சியாக எழுத முனைந்திருக்கின்றார். அவரது தொடர் குறிப்புகள் எமது 3 வது வடுவில் இருந்து ஆரம்பமாகின்றது.

தென்னை பனைகளின் தோப்பு, பச்சை வயல்களின் எல்லையும், கோயில்களும், சிறிய குளங்களும் வழுக்கை ஆறும், இந்து, கிறிஸ்தவ பாடசாலை களையும் (ஆங்கில, தமிழ் பாடசாலைகள்) பின்னணியாகக் கொண்டு அமைந்ததுதான் சண்டிலிப்பாய்க் கிராமம். இது ஒரு இருவாட்டி மண்ணை கொண்ட ஓர் அழகிய கிராமம். இக்கிராமம் பல சாதியப் பிரிவுகளையும் கொண்டதாக விளங்குகிறது.

சண்டிலிப்பாய் சின்னத்தம்பி புலவரால் அந்தாதி பாடப்பட்ட தலமான கல்வளை பிள்ளையார் கோயிலின் தென்கிழக்குப் பகுதிதான் சண்டிலிப்பாய். இதில் சிறு குறிச்சிதான் கேணிக்கட்டு இது ஒரு வளவின் பெயர். இருந்தும் அப்புகுதியில் வாழ்பவர்களை கேணிக்கட்டார் (கல்வளை) என்றும் விளித்து அழைப்பார்கள். குடாநாட்டில் உள்ள கிராமங்களில் சிறு சிறு பிரிவுகள் உண்டு. அதுவும் சாதிய சமூகப் பிரிவின் அடிப்படையில்தான் அக்கிராமங்களின் பெயர்கள் புனையப்பட்டிருக்கும். நடுக்குறிச்சி, பள்ளகடவை, தச்சகடவை, நளவகுறிச்சி, பறையர்கடவை, வண்ணாரத்துண்டு, அம்பட்டக்கடவை இப்படியாக சாதிய அடையாளங்களைக் கொண்டவையாகவே கிராமங்கள் அமைக்கப்பட்டிருக்கும். ஒருவரின் முகவரியோ அல்லது ஒருவரின் சாதியோ தெரிய வேண்டுமானால் குறிச்சி குறிகாட்டிவிடும். அத்தோடு ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு தெய்வமும் உண்டு. நளவருக்கு வைரவர், பள்ளருக்கு நாச்சிமார், பறையருக்கு பேச்சி அம்மன், வண்ணாருக்கு வைரவர் இவ்வாறு சாதிகளுக்கு ஒவ்வொரு தெய்வம் பிரிக்கப்பட்டது. இவை இன்றும் குடாநாட்டில் நிலைத்து நிற்பதனையும் நாம் அறியமுடியும். பிள்ளையார், முருகன், நாகம்மாள் போன்ற தெய்வங்கள் உயர்சமூகத்தின் வணக்கத்துக்குரிய தெய்வங்களாக விளங்குபவை.

நானும் மேற்குறிப்பிட்ட கேணிக்கட்டு என்கின்ற குறிச்சியில்தான் பிறந்தேன். என் பேரன், பூட்டன் வழியினரும் அந்த குறிச்சியை சார்ந்தவர்களே. பிள்ளையார் கோவிலின் அயலில் வாழ்ந்தவர்கள் ஆதலால் சைவசமய அனுஸ்டானங்களிலும், பிள்ளையார் மீதும் நம்பிக்கைகொண்டவர்கள்தான் அதிகம். எனக்கும் சிறுவயது முதல் பிள்ளையார் மீதான பக்தி இருந்ததுண்டு. இருந்தபோதும் யாழ் சமூக அமைப்பு சாதித்துவ மேலாதிக்க உணர்வு கொண்ட காரணத்தால் கோவில்களில் மட்டுமல்ல பாடசாலைகளிலும் தம் சாதித்துவ மேலாதிக்கத்தை பிரயோகித்து வந்தது.

1930 ஆண்டு மேற்படி சாதிய மேலாதிக்க ஒடுக்குமுறையால் சிறுபான்மை (தலித்) சமூகம் கல்விபெறுவதென்பது கடினமாக இருந்தது. இருப்பினும் சில துடிப்புள்ள துணிவான சில மாணவர்கள் கிறிஸ்தவ பாடசாலைகளில் சேர்ந்து கல்விகற்றனர். இம்மாணவர்கள் உடுவில் மான்ஸ்க் கிறிஸ்தவ பாடசாலையிலும் இளவாலை சென் ஹென்றிஸ் பாடசாலையிலும் சேர்ந்து படித்தனர். இப்படிப்படித்த சிலர் இன்றும் உயிருடன் இருக்கிறார்கள்.

தொடரும்...